முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1238

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.02.2023, சனிக்கிழமை**

1. தர்ம சக்திமிகு அரங்கனே
தவ பலமிக்க தேசிகனே
பெருமைமிக்க தொண்டர்களை உருவாக்கி
பேருலகையே மாற்றவந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சுபகிருது சால் திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 06 ம் நாள், 18.02.2023 சனிக்கிழமை)
3. தன்னிலே அரங்க மகா சக்தியாக
தவதர்ம ஞான சக்தியாக
மண்ணுலகை மீட்கும் ஒரே தவசி நீயப்பா
மக்களை காக்க தன் சக்திகள் அனைத்தையுமே
4. அனைத்தையுமே இந்த அவதாரத்தில்
தயவாக மாற்றி தரணியில்
என்பலத்தையும் பரிபூரணமாய் இணைத்து
இணைத்து பேர் அற்புதம் நிகழ்த்துகின்ற ஒரே குரு நீ
5. நிலமதனில் உன்னை அறிந்தவர்க்கு
வறுமைவெல்லும் மகா சக்தி
நன்னயமாய் இவைபிறவி தானே கண்டு
ஞானவான்களாய் ஞானிகளாகவே மாற்றம் பெறுவரப்பா
6. அப்பனே அற்புதத்தை நடத்த அரங்கன் உன்னுள் ஆறுமுகன் யானும் கலந்து பரிபூரணமாய்
ஏற்புகொண்டு உன் தொண்டர்கள்என எங்கெல்லாம்இனிதே உன்நாமஜெபம் போற்றுகின்றாரோ
போற்றுகின்ற மக்களுக்கெல்லாம் பூவுலகில் சூட்சுமமாய் காட்சியாய்
வரமாக சர்வ சூட்சுமமாய் இறங்கி அருளுகின்றேன்
7. ஆகவே அரங்கனை உணர்ந்தோர்க்கு
அழியாமை என்பது உறுதியாகும்
ஜெகத்தினில் அரங்கன் தர்மத்தை செய்து வந்தோர்க்கு
சித்தியும் இனிபிறவா பெரும்பேரும் ஈதூழே சித்திக்கும் என்பது உறுதிஉறுதி
8. உறுதி தந்து அரங்கன் ஞானத்துள்
உயிரோட்டமாக சர்வபலமாக ஆறுமுகன் யான் கலந்து அற்புதம் நடத்துகின்றேன்
அன்னதனால் உலகோர் அரங்கனை நோக்கி வர
சர்வபலமும் கண்டு இவைபிறவியில் சகல சூட்சுமமும் அறிந்து தேறுவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–